தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,                                                                 தேதி: 2-1-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை த்’களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை உதவிப் பேராசிரியைக்கு பரிசு

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் குளத்துப்பாளையம் வள்ளலார் அருள்ஜோதி 15வது ஆண்டு விழா கே.என். லிங்கசாமி ஐயா நினைவு அறக்கட்டளை சார்பில் தாராபுரம் வள்ளலார் சன்மார்க சங்க கட்டிடத்தில் 25-12-2014 அன்று நிகழ்த்தப்பட்டது.

முன்னதாக, மாநில அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு வள்ளலார் கோட்பாடுகள் குறித்த கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. சுமார் ஆயிரம் பேர் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர். மு.ரா. லதா அவர்கள் இரண்டாம் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். விழா அமைப்பாளர் திரு. லிங்கம் சின்னசாமி அவர்கள் சான்றிதழ், தங்கப்பதக்கம், முன்னூறு ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வள்ளலார் கோட்பாடு குறித்த புத்தகங்களை பரிசாக வழங்கினார்.

“ஜீவ காருண்யமே மோட்சத்தின் திறவுகோல்” என்னும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட இக்கட்டுரையில் புலால் உண்ணாமை மட்டும் ஜீவகாருண்யம் அல்ல, உடையில், சுற்றுச் சூழல், தொழில், குடும்பம் மற்றும் சமூகத்தில் ஜீவகாருண்யம் தேவை என்னும் கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரின் பிறர்நலம் பேணுதல், உயிருள்ள, உயிரற்ற ஜடப்பொருட்கள் இரண்டிலும் சமநோக்கு, பகுத்தறிவு என்ற பெயரில் மனிதன் இயற்கைக்கு எதிராக செய்யும் அட்டூழியங்கள், மத்திய, மாநில அரசுகள் வகுக்கும் நல்ல திட்டங்களுக்கு மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டியதன் அவசியம், மனப்பாடக் கல்வி மாறி உண்மையான ஞானம் தரும் கல்வி முறை ஏற்பட்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகள் மனிதர்கள் மற்றும் மகாத்மாக்கள் உருவாக வேண்டியதன் அவசியம் மற்றும் நல்ல மனிதவளம் உருவாகி இயற்கையோடு இனைந்து வாழ வேண்டியதன் கட்டாயம், நம்மிடம் உள்ள

வளங்களெல்லாம் முன்னோர்களிடமிருந்து பெற்றதல்ல, வருங்கால தலைமுறையிடமிருந்து கடனாகப் பெற்றது. எனவே அவற்றை அவர்களுக்கு நல்ல விதமாகக் கொடுக்க வேண்டும் என்னும் கோட்பாடுகள் விளக்கப்பட்டது.

விழாவில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து சன்மார்க்க சங்க தலைவர்கள், அருளாலர்கள், சமூக ஆர்வலர்கள், வேதாத்திரியம் ஆசிரியர் திரு. எல். தேவராஜன், வேளாண் பல்கலை பேராசிரியர் (ஓய்வு) ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். விழாவில் திருவருட்பா அகவல் பாராயணம், இன்னிசை, யோகா மற்றும் பெரியோர்களின் சொற்பொழிவு ஆகியவை நிகழ்த்தப்பட்டது.

மக்கள் தொடர்பு அலுவலர்